செ.வெ.எண்.03 நாள்: 02.11.2020

**நீலகிரி மாவட்டம் உதகை பிரிக்ஸ் பள்ளியில் உதகை ஊராட்சி ஒன்றியம் சார்பில் ஊராட்சி துறையில் பணிபுரியும் தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.**

---

நீலகிரி மாவட்டம் உதகை பிரிக்ஸ் பள்ளியில் உதகை ஊராட்சி ஒன்றியம் சார்பில் ஊராட்சி துறையில் பணிபுரியும் தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாமினை இன்று (02.11.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டு கூறியதாவது,

நீலகிரி மாவட்டத்தில் கொரோனா தொற்று நோய் காலத்தில் தன்னலம் கருதாமல் பணியாற்றிய தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோருக்கு மருத்துவ முகாம் இன்று நடத்தப்பட்டது. இம்முகாமில் தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், உயரம், எடை, மற்றும் பெண்களுக்கு கர்ப்பபை வாய் புற்றுநோய் தொடர்பான பரிசோதனை போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் சளி மாதிரிகள் எடுக்கப்பட்டு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. வெளியில் செல்லும் போது கட்டாயமாக முககவசம் அணிந்திருக்க வேண்டும் எனவும் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்து மல்டி விட்டமின் மாத்திரைகள் மற்றும் ஜிங்க் மாத்திரைகளை துப்புரவு பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு.பாலுச்சாமி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.முருகேசன், மரு.ஹரீதர், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஹரீதரன், திரு.ஜெய்சங்கர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.